**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**
**பெரிய திருமொழி**
**பத்தாம் பத்து**

**பத்தாம் திருமொழி - திருத்தாய்**
**தலைமகனைப் பிரிந்த தலைமகள் ஆற்றாது கூறிய பாசுரம்**

** திருத்தாய் செம்போத்தே! *
திருமாமகள் தன் கணவன் **
மருத் தார் தொல் புகழ் * மாதவனை வர *
திருத்தாய் செம்போத்தே! 1

கரையாய் காக்கைப் பிள்ளாய்! *
கரு மாமுகில் போல் நிறத்தன் **
உரை ஆர் தொல் புகழ் * உத்தமனை வர *
கரையாய் * காக்கைப் பிள்ளாய்! 2

கூவாய் பூங்குயிலே! *
குளிர் மாரி தடுத்துகந்த **
மாவாய் கீண்ட மணிவண்ணனை வர *
கூவாய் பூங்குயிலே! 3

கொட்டாய் பல்லிக் குட்டி! *
குடம் ஆடி உலகளந்த **
மட்டார் பூங்குழல் * மாதவனை வர *
கொட்டாய் பல்லிக் குட்டி! 4

** சொல்லாய் பைங்கிளியே! *
சுடர் ஆழி வலன் உயர்த்த **
மல்லார் தோள் * வட வேங்கடவனை வர *
சொல்லாய் பைங்கிளியே! 5

கோழி கூவென்னும் ஆல் *
தோழி! நான் என் செய்கேன்? **
ஆழி வண்ணர் * வரும் பொழுது ஆயிற்று *
கோழி கூவென்னும் ஆல் 6

காமற்கு என் கடவேன்? *
கரு மாமுகில் வண்ணற்கு அல்லால் **
பூ மேல் ஐங்கணை கோத்துப் * புகுந்து எய்ய *
காமற்கு என் கடவேன்? 7

** இங்கே போதுங்கொலோ? *
இன வேல் நெடுங்கண் களிப்ப **
கொங்கார் சோலைக் * குடந்தைக் கிடந்த மால் *
இங்கே போதுங்கொலோ? 8

இன்னார் என்று அறியேன் *
அன்னே! ஆழியொடும் **
பொன்னார் சார்ங்கம் * உடைய அடிகளை *
இன்னார் என்று அறியேன் 9

** தொண்டீர்! பாடுமினோ *
சுரும்பார் பொழில் மங்கையர் கோன் **
ஒண்தார் வேல் * கலியன் ஒலி மாலைகள் *
தொண்டீர்! பாடுமினோ 10

**அடிவரவு:** திருத்தாய் கரையாய் கூவாய் கொட்டாய் சொல்லாய் கோழி காமற்கு இங்கே இன்னார் தொண்டீர் குன்றமொன்று

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---